1878051

No. of Printed Pages : 7

**5601**

பதிவு எண் | | | | | | |

# பகுதி I — தமிழ் — முதல் தாள்

## (செய்யுளும், இலக்கணமும்)

# Language — Part I — TAMIL — Paper I

நேரம் : 3 மணி ] [ மதிப்பெண்கள் : **100**

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்து கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** (i) விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) வினா எண் **VI**-க்கான விடைகள் மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

**I.** பின்வரும் வினாக்களுள் **எவையேனும் நான்கனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **ஐந்து வரிகளில்** விடை எழுதுக. **4x2=8**

**1.** எட்டுத்தொகை நூல்கள் யாவை ?

**2.** உருவு கண்டு எள்ளாமை வேண்டும் - ஏன் ?

**3.** சிலப்பதிகாரம் கூறும் மூன்று உண்மைகள் யாவை ?

[ திருப்புக

4. முக்கூடலில் கூடும் ஆறுகள் யாவை ?

5. பாவேந்தரின் பிறப்பு, பெற்றோர் பற்றிக் குறிப்பு எழுதுக.

6. எச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளை இயற்றிய வேறு நூல்கள் யாவை ?

II. பின்வரும் வினாக்களுள் **எவையேனும் மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து வரிகளில்** விடை எழுதுக. **3x4=12**

7. 'வாழிய வாழிய வென்றடி வாழ்த்துவமே' - என்று மொழியை வாழ்த்தியவர் யார் ? வாழ்த்தக் காரணங்கள் யாவை ?

8. வினைமேற் சென்ற தலைவனிடம் தூது வந்த பாணன் தெரிவித்த செய்தி யாது ?

9. அறிவுடையாரின் இலக்கணங்களாக வள்ளுவர் கூறியனவற்றை எழுதுக.

10. கவண் சுழற்றியவன் யார் ? அவன் உரைத்த மறுமொழி யாது ?

11. பேழையை மீட்டுத் தருமாறு அன்னம் வேலனை எவ்வாறு வேண்டிக் கொண்டாள் ?

III. பின்வரும் வினாக்களுள் **எவையேனும் மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து வரிகளில்** விடை எழுதுக. **3x4=12**

12. இராசராச சோழனின் வில், வாள், முரசு, கொடி, குடை குறித்துக் கூறப்பட்டன யாவை ?

13. பெருமாள் உறை திருவேங்கடப்பதி குறித்துப் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் கூறுவன யாவை ?

14. இடம் சுட்டி விளக்குக. 'கன்றுகுரல் கேட்ட பசு போல'

15. நாயினேன் மறந்து என்னினைக்கேனே என்று சுந்தரர் உருகு மாற்றினை விளக்குக.

16. மணிமேகலா தெய்வம் புத்தபிரானைப் போற்றி செய்தமை யாங்ஙனம் ?

**IV.** பின்வரும் வினாக்களுள் **ஏதேனும் ஒன்றனுக்கு இருபது வரிகளில்** விடை எழுதுக. **1x8=8**

**17.** பொறையுடைமை பற்றி வள்ளுவர் கூறியுள்ள கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

**18.** மருண்மாலைப்போதில் கண்ணகி இணைந்து ஏங்கி உரைத்தனவும் கோவலனைக் கண்ட பொழுது நிகழ்ந்த அற்புதத்தையும் இருபது வரிகளில் வரைக.

**19.** மூலையில் கிடக்கும் வாலிபனிடம் தாராபாரதி கூறும் அறிவுரைகளைத் தொகுத்து எழுதுக.

**V.** பின்வரும் செய்யுளடிகளின் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. **4x1=4**

**20.** ''யாருமில்லைத் தானே கள்வன்

தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ''

(அ) இதில் கள்வன் எனக் குறிப்பிடப்பட்டவன் யாவன் ?

(ஆ) இஃது யார், யாரிடம் கூறிய கூற்று ?

(இ) இக் கூற்றமைந்த செய்யுளைப் பாடியவர் யார் ?

(ஈ) இப்பகுதி எந்நூலில் இடம் பெற்றுள்ளது ?

**அல்லது**

**21.** ''கண்டனென் கற்பினுக் கணியைக் கண்களால்''.

(அ) கண்டது யார் ?

(ஆ) யாரைக் கண்டான் ?

(இ) இவ்வரி இடம் பெற்ற நூல் எது ?

(ஈ) இந்நூல் ஆசிரியர் யார் ?

[ திருப்புக

VI. 22. ''ஏமவெற்பென்று'' எனத் தொடங்கும் மதுரைக் கலம்பகப் பாடலை அடி பிறழாமல் எழுதி அதன் பா வகையையும் எழுதுக. 4+2=6

23. ''நன்றி'' எனத் தொடங்கும் குறளையும் ''அரண்'' என முடியும் குறளையும் அடி பிறழாமல் எழுதுக. 2+2=4

VII. 24. எவையேனும் **இரண்டு** சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக. 2x2=4

(அ) தோன்றி (ஆ) வேண்டேன் (இ) கொள்வர்

(ஈ) தொழுகிலன் (உ) செய்த (ஊ) புனைந்தோம்

25. பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றனுக்கு** இலக்கணக் குறிப்பு தருக. 3x2=6

(அ) கயிலாய வெற்பு (ஆ) தழீஇ (இ) வைவேல்

(ஈ) சோணாடு (உ) உயர் எண்ணம் (ஊ) ஆனாத

26. எவையேனும் **இரண்டு** தொடர்களைப் பிரித்துப் புணர்ச்சி விதி தருக. 2x2=4

(அ) முள்ளிலை (ஆ) மாசற்றார் (இ) பொற்கொடி

(ஈ) தினையளவு (உ) செழும்பொன் (ஊ) தீக்குச்சி

27. சான்று தந்து விளக்குக. 1x4=4

பொருண்மொழிக் காஞ்சி

**அல்லது**

நெய்தல் திணை

28. 'செம்பொற்கொடி அணையாள் கண்டாளைத் தான் காணான் 1x4=4
மல்லன்மா ஞாலம் இருள் ஊட்டி, மாமலை மேல்
செவ்வென் கதிர் சுருங்கிச் செங்கதிரோன் சென்றொளிப்ப'

- இப்பாடலடிகளில் பயின்றுவரும் அணியைச் சுட்டி விளக்குக.

**அல்லது**

சொற்பொருள் பின்வரு நிலையணி

**அல்லது**

எடுத்துக்காட்டு உவமை அணி - சான்று தந்து விளக்குக.

VIII. பொருத்துக. 4x1=4

| நூல் | | ஆசிரியர் |
|---|---|---|
| 29. குயில் பாட்டு | - | அப்துல் ரகுமான் |
| 30. அழகின் சிரிப்பு | - | சுரதா |
| 31. துறைமுகம் | - | பாரதியார் |
| 32. பால் வீதி | - | தாராபாரதி |
| | - | பாரதிதாசன் |

IX. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 16x1=16

33. கம்பர் காலத்தில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர் :
(அ) நக்கீரர் (ஆ) ஒட்டக்கூத்தர் (இ) இளங்கோவடிகள்

34. தமிழரின் வாழ்வியல் சிந்தனைகளைக் கருவூலமாகக் கொண்டு விளங்கும் நூல் :
(அ) அகநானூறு (ஆ) ஐங்குறுநூறு (இ) புறநானூறு

35. அகநானூறு நித்திலக்கோவையில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை :
(அ) 100 (ஆ) 120 (இ) 180

36. 'வள்ளுவனைப் பெற்றதாற் பெற்றதே புகழ் வையகமே' எனப் பாடியவர் :
(அ) பாரதிதாசன் (ஆ) கவிமணி (இ) பாரதியார்

37. திருக்குறளில் அமைந்துள்ள இயல்கள் :
(அ) 4 (ஆ) 9 (இ) 10

38. 'மாறி வருவன் ; மயங்காது ஒழிக' எனக் கூறியவர் யார் ?
(அ) கண்ணகி (ஆ) கோவலன் (இ) மாதரி

[ திருப்புக

39. சிறிய திருவடி என்று அழைக்கப்படுபவர் :
(அ) கருடன் (ஆ) அனுமன் (இ) வீடணன்

40. வீரமாமுனிவரின் தாய்நாடு :
(அ) தமிழகம் (ஆ) பிரான்சு (இ) இத்தாலி

41. ''வருவேங் கடத்தும்பி யஞ்சல்'' - இவ்வடியில் 'தும்பி' என்பது :
(அ) கஜேந்திரன் (ஆ) ஐராவதம் (இ) முதலை

42. முக்கூடற் பள்ளுக்குரிய பா வகை :
(அ) சிந்துப்பா (ஆ) ஆசிரியப்பா (இ) வஞ்சிப்பா

43. பெருமாள் திருமொழியில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை :
(அ) 105 (ஆ) 110 (இ) 115

44. தமிழகத்தின் வேர்ட்ஸ் வர்த் என்று பாராட்டப் பெறுபவர் :
(அ) பாரதிதாசன் (ஆ) வாணிதாசன் (இ) தாரா பாரதி

45. பாஞ்சாலி சபதத்தில் உள்ள சருக்கங்களின் எண்ணிக்கை :
(அ) 5 (ஆ) 7 (இ) 9

46. செந்தமிழை செழுந்தமிழாகக் காண விரும்பியவர் :
(அ) பாரதியார் (ஆ) பாரதிதாசன் (இ) கம்பதாசன்

47. 'கன்னிபாலன்' எனப்படுபவர் :
(அ) வளன் (ஆ) தாவீது (இ) இயேசு

48. 'சின்னச்சீறா' என்ற நூலை எழுதியவர் :
(அ) உமறு புலவர்
(ஆ) குணங்குடி மஸ்தான்
(இ) பனு அகுமது மரைக்காயர்

X. கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக. 2+2=4

**49.** எழுமை __________ உள்ளுவர் தங்கண்

விழுமம் __________ நட்பு.

**50.** துன்பம் உறவரினும் __________ துணிவாற்றி

__________ பயக்கும் வினை.

-oOo-